

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5.5.2025) நேரு விளையாட்டரங்கிலுள்ள சென்னை ஒலிம்பிக் அகடமியில் நடைபெற்ற விழாவில், சென்னை மாவட்ட ஸ்டார் அகாடமிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ள துப்பாக்கி சுடுதல் விளையாட்டில் பயிற்சி பெற இருக்கும் வீரர், வீராங்கனைகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய துணைத் தலைவர்கள் என்.ராமசந்திரன், அசோக் சிகாமணி மற்றும் முதலமைச்சர் விளையாட்டு விருதாளர்கள், விளையாட்டு வீரர், வீராங்கனைகள், பயிற்றுநர்கள், அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் ஒன்றிய முன்னாள் செயலாளர் மிசா பி.மதிவாணன் 2ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 500 மாற்றுத்திறனாளிகளுக்கு நிதிஉதவி மற்றும் மளிகைப் பொருட்களை மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும் பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் வழங்கினார். உடன் சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் ஏ.சி.என்.விஜயபாலன், மாவட்டக் கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர் மற்றும் பலர் உள்ளனர்.

### புதுக்கோட்டை தெற்கு மாவட்டத்தில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான கழக அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எஸ். ரகுபதி அறிக்கை!

புதுக்கோட்டை, மே 7-

புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளர் சட்டத்துறை அமைச்சர்எஸ்.ரகுபதி அறிக்கை!

தமிழக முதலமைச்சர் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் 03.05.2025 அன்று நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் தலைவர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின் படி தி.மு.க. அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் கீழ்க் கண்ட விவரப்படி நடைபெறும். நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு

தி.மு.க. அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டங்கள்! திருமயம் தெற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் ஆறு.சிதம்பரம், பேச்சாளர் இனியன் அமுதன், அரிமளம் வடக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் பொன்.ராமலிங்கம், பேச்சாளர்

சு.பாலகிருஷ்ணன், மணமேல்குடி தெற்கு ஒன்றியம், ஏற்பாடு. ஒன்றிய கழக செயலாளர் எஸ்.எம்.முகம்மது அப்துல்லா, பேச்சாளர் தஞ்சை கலைமணி பாரதி,

09.05.2025 திரு வரங்குளம் கிழக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் கே.எஸ்.ரவி, பேச்சாளர் இனியன் அமுதன், அரிமளம் தெற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் வி.ஆர்.இளையராஜா, பேச்சாளர் பாலக்கரை டி.கோவிந்தன், அறந்தாங்கி தெற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர்



பொன்.கணேசன், பேச்சாளர் வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி,

10.05.2025 திருமயம் வடக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் இரா.கணேசன், பேச்சாளர் சு.பாலகிருஷ்ணன், அறந்தாங்கி நகரம், ஏற்பாடு நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன், பேச்சாளர்கள் தஞ்சை கலைமணி பாரதி,

சு.சுகநிலவன், ஆவுடையார்கோவில் வடக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் உதயம் சண்முகம், பேச்சாளர் தீக்கனல் என்.செல்வம்,

அறந்தாங்கி மேற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் அமைச்சர் சி.வீ.மெய்யநாதன், பேச்சாளர் சிவா.(எ)சிவக்குமார்,

11.05.2025 பொன்னமராவதி வடக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் அ.முத்து, பேச்சாளர் பாலக்கரை டி.கோவிந்தன் அறந்தாங்கி கிழக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் குமார்(எ) துரைக்கண்ணு, பேச்சாளர் சிவா.(எ)சிவக்குமார், ஆவுடையார்கோவில் தெற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் வே. பொன்துரை, பேச்சாளர் வயலூர் கா.கிருஷ்ணமூர்த்தி,

12.05.2025 பொன்னமராவதி தெற்கு

ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் அ.அடைக்கலமணி, பேச்சாளர் முகமது இலியாஸ், மணமேல்குடி வடக்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் சக்தி ராமசாமி, பேச்சாளர்

தீக்கனல் என்.செல்வம் திருவரங்குளம் மேற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி, பேச்சாளர் தஞ்சை கலைமணி பாரதி 13.05.2025 திருவரங்குளம் தெற்கு ஒன்றியம், ஏற்பாடு ஒன்றிய கழக செயலாளர் அரு.வடிவேல், பேச்சாளர் முகம்மது இலியாஸ்.

இவ்வாறு அவர்அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் !

## மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் அறிவிப்பு!

புதுக்கோட்டை, மே 7-

புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.கே.செல்லபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:

புதுக்கோட்டை வடக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று 07.05.2025 புதன்கிழமை காலை 11 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகம் பெரியண்ணன் மாளிகையில் உள்ள கீரை தமிழ்ச்செல்வன் அவை கூடத்தில் மாவட்ட அவைத்தலைவர் அரு.வீரமணி தலைமையில் நடைபெறுகிறது.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டச் செயலாளரும், சட்டத்துறை அமைச்சருமான எஸ்.ரகுபதி, பிற்படுத்தப்பட்டோர் நலத்



துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், எம்.எம்.அப்துல்லா எம்.பி. டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் பெரியண்ணன் அரசு,

கவிச்சுடர் கவிதைப் பித்தன், மேயர் திலகவதி செந்தில், அஞ்சுகா மீனாட்சிசுந்தரம், புதுக்கோட்டை விஜயா, த.சந்திரசேகரன், பி.டி.அரசக்குமார், வி. என்.மணி, சுப.

சரவணன், டாக்டர் எஸ்.ஆர். அண்ணாமலை, செ.அசோக்பாண்டியன் கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, க.மதியழகன், பெ.ராஜேஸ்வரி, எம்.லியாகத்அலி, கீரை.தமிழ்ராஜா, சு.சண்முகம் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்நிகழ்வுகளில் பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய,பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது அறிக்கையில் கூறி உள்ளார்.

### நிவேதா எம்.முருகன் தலைமை! குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்புரை!

# மயிலாடுதுறையில் பட்ஜெட் விளக்கப் பொதுக் கூட்டம்!

## ஆர்.ராசா எம்.பி., அமைச்சர் - சிவ.வீ.மெய்யநாதன் சிறப்புரை!

## குத்தாலம் பி.கல்யாணம், எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., பங்கேற்பு!

மயிலாடுதுறை மே 7-

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா, சட்ட போராட்டத்தில் வென்ற முதல்வர் தளபதிக்கு பாராட்டு விழா மற்றும் கழக அரசின் பட்ஜெட் விளக்க பொதுக் கூட்டம் மயிலாடுதுறை சின்னகடை வீதியில் நடைபெற்றது.

பொதுக்கூட்டத்திற்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் தலைமை தாங்கினார். மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளரும், மயிலாடுதுறை நகர்மன்ற தலைவர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் வரவேற்றார். ஒன்றியக் கழகச் செயலாளர்கள் மூவலூர் எம்.மூர்த்தி, என். இளையபெருமாள், ஞான. இமையநாதன், பி.முருகமணி, மங்கை எம்.சங்கர், ஏ.ஆர்.ராஜா, கு.வைத்தியநாதன், பி.எம்.அன்பழகன், எம்.அப்துல்மாலிக், அமிர்த. விஜயகுமார், பஞ்சு.குமார், ஏ.ஜி.ஜெ.பிரபாகர், செல்ல சேதுரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், சீர்காழி நகரக் கழகச் செயலாளர் ம.சுப்பராயன், பேரூர் செயலாளர்கள் என்.அண்ணாதுரை, எம்.சம்சுதீன், எஸ்.கே.முத்துராஜா, எம். அன்புச்செழியன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் கழக துணை பொதுச் செயலாளரும், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, பிற்படுத்தப்படோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

கூட்டத்தில் கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், சீர்காழி சட்ட மன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம், மாநில இளைஞரணி துணை செயலாளர் தாட்கோ தலைவர் என். இளையராஜாசட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் கி.சத்தியசீலன், கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் குத்தாலம் க.அனபழகன், மாநில விவசாய அணி இணைச் செயலாளர் ஆர்.அருள்செல்வம், தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஶ்ரீதர், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், சட்ட மன்ற முன்னாள் உறுப்பினர் எம்.எம். சித்திக், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், முத்து. மகேந்திரன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன், துணைச் செயலாளர்கள் மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, கண்ணகிபன்னீர், பொருளாளர் மகா.அலெக்சாண்டர், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், எஸ்.சங்கரநாராயணன், நத்தம் ஏ.வின்சென்ட், அ. காந்தி, ஹர்சத், பி.கென்னடி, ஜெ.கபிலன், வைத்தீஸ்வரன்கோயில் எஸ். சுவாமிநாதன். சுபா நெடுஞ்செழியன்,

மயிலாடுதுறை நகரக் கழக நிர்வாகிகள் எஸ்.நடராஜன், மலைக்கேயில்எம். பிரபாகர், ஆர்.கே.சங்கர், வை.தெய்வநாயகம், மேனகா.மாரியப்பன், எம். குமார், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் வி.எஸ்.என்.செந்தில், ஆர்.முருகன், இரா.மனோகரன், சாந்திஇராமலிங்கம், தீபாசத்தியேந்திரன், ஆர். செல்வராஜ், வி.எஸ்.பிரபாகர், இரா.முருகப்பா, என். எம்.சம்சுதீன், குத்தாலம் அறிவு (எ) அறிவுச்ல்வன், ஆர்.எஸ்.ஸ்ரீதர், எம்.எஸ். முத்துகுபேரன், பெரு.வீரமணி, காளி.தேசப்பன், வெடி எஸ்.பாலமுருகன், ஆர்.தன்ராஜ், மா.வைத்தியநாதன், டி.ராஜ்குமார், கே.விக்னேஷ், ஒன்றியக் குழு முன்னாள் தலைவர் மகேந்திரன் மற்றும் முன்னாள் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், வார்டு கழக நிர்வாகிகள், நகர்மன்ற உறுப்பினர்கள் சார்பு அணிகளின் நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் மயிலாடுதுறை நகர்மன்ற துணைத்தலைவர் எஸ்.எஸ்.குமார் நன்றி கூறினார்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில் திராவிட மாடல் ஆட்சியின்

# 5 ஆம் ஆண்டு தொடக்க நாளை எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் அறிக்கை!

நெல்லை, மே 7-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் மிகுந்த மகிழ்ச்சி நிறைந்த எழுச்சியுடன் கொண்டாடுவீர்.என நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா. ஆவுடையப்பன் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பதாவது.

நாடும்,ஏடும் போற்றும் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அன்புத்தளபதியார் அவர்களுடைய திராவிட மாடல் ஆட்சியின்ஐந்தாம் ஆண்டு தொடக்க நாள் இன்று(07.05.2025) ஆகும்.

தமிழ்நாட்டு மக்களுக்கும்,நம் திருநெல்வேலி மாவட்டத்திற்கும் எண்ணற்ற திட்டங்களை தந்து வரும் நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்களின் ஆட்சி ஐந்தாம் ஆண்டு தொடக்க நாளாம் இன்று (07.05.2025) மிகச் சிறப்பாக மிகச் சிறப்பாக எழுச்சியுடன் கொண்டாடும் வகையில் நம் திருநெல்வேலி கிழக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு அனைத்திலும் பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கி, நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் நீர்மோர் பந்தல் !

## மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாடு!

ஈரோடு, மே 7-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழக தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளரும் , தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அறிவுறுத்தலின்படி, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சரும், ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளருமான சு.முத்துசாமி வழிகாட்டுதலின் படி,

ஈரோடு தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட அமைப்பாளர் ஜெ.திருவாசகம் ஏற்பாட்டில் மாவட்ட கழக பொருளாளர் ப.க.பழனிசாமி தலைமையில், 14வது வார்டு செயலாளர் ஆர். மாணிக்கம் மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் சே.மதன்குமார், துணை அமைப்பாளர்கள் சுரேஷ்குமார், பிரசாத், பரணிதரன், அன்பழகன், முன்னிலையில், 14 வது நாளாக மணிக்கூண்டில் பொதுமக்களுக்கு நீர்மோர் வழங்கப்பட்டது.

நிகழ்வில் இளைஞர் அணி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, மாநகர, பகுதி, வார்டு, ஒன்றிய, பேரூர் கழக மற்றும் சார்பு அணிகளின் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு ஆர்.எஸ்.புரம் பகுதி கழகம் டி.பி. சாலையில் கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தொழிற்சங்க கொடியேற்றி, ஆட்டோ ஓட்டுநர்களுக்கு சீருடை வழங்கி, காரமடையில் ஆட்டோ ஸ்டாண்டினை திறந்து வைத்தார். இதில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.சண்முகசுந்தரம், அஷ்ரப் அலி, ஆர்.எஸ்.புரம் பகுதி கழக செயலாளர்கள் கார்த்திக், கே.செல்வராஜ், நகர கழக செயலாளர்கள் காரமடை வெங்கடேஷ், மேட்டுப்பாளையம் தெற்கு முனுசாமி, பொதுக்குழு உறுப்பினர் குரு பிரசாத் உள்பட ஆட்டோ ஓட்டுனர் அணி நிர்வாகிகள், தொ.மு.ச.நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக 05.05.2025 அன்று சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம், தாண்டவராயபுரம் கிராமத்தில் ரூ. 3 கோடி மதிப்பீட்டில் சிறு விளையாட்டரங்கத்திற்கு அடிக்கல் நாட்டி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது . இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே. மலையரசன், ஆத்தூர் வருவாய் கோட்டாட்சியர் தா. பிரியதர்ஷினி, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நல அலுவலர் எஸ். சிவரஞ்ஜன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.சிவலிங்கம், முன்னாள் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் சுரேஷ்குமார், அட்மா குழு தலைவர் டாக்டர் வே.செழியன், முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர் தனலட்சுமி சசிகுமார், உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



மே 1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோவை மாவட்ட திராவிட ஆட்டோ ஓட்டுனர் முன்னேற்ற சங்கம் சார்பில் உக்கடம் பேருந்து நிலையம் முன்புறம் 81 வது வட்டக் கழக செயலாளர் டவுன் பா.ஆனந்தன், ஆட்டோ தொழிற்சங்க துணைச் செயலாளர் செந்தில்குமார் தலைமையில், கழக தீர்மானக்குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், பெரியகடை வீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ.பதுருதீன், வட்டக் கழகச் செயலாளர் ஏ.அப்பாஸ், பகுதி துணைச் செயலாளர் முத்து முருகன், அவைத்தலைவர் தாமஸ் வீதி ராஜா, பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ்குமார், ஆட்டோ தொழிற்சங்க தலைவர் சரவணன், பொருளாளர் சரத்குமார், துணைச் தலைவர் வினோத்குமார் முன்னிலையில் நடைபெற்ற ”உழைப்பாளர் தின நிகழ்ச்சியில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் நா.கார்த்திக் கலந்து கொண்டு தொ.மு.ச. தொழிற்சங்க கொடியேற்றி 500 க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவினை வழங்கினார். இதில் கழக நிர்வாகிகள், மாநகர் மாவட்ட ஆட்டோ சங்க நிர்வாகிகள், தொ.மு.ச. தொழிற்சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.